**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – பணியிடை இறந்த அரசு ஊழியர் திரு. பெ. சீனிவாசன் என்வரின் மகள் செல்வி சீ.சுவாதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (என்.2) துறை

அரசாணை (3டி) எண்: 5

நாள்: 09.03.2021
சார்வரி, மாசி–25
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை. நாள். 01.08.2018.
2. அரசாணை (3டி) எண் 4, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (என்2) துறை, நாள் 13.01.2020.
3. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடிதம் எண். நிர்2/16696/2018, நாள். 24.12.2020.

--------

**ஆணை:-**

திரு. பெ. சீனிவாசன், விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் இளநிலை வேலைவாய்ப்பு அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 14.02.2014 அன்று பணியிடை இறந்ததால், இறந்த அரசு ஊழியரின் மனைவி திருமதி சீ. சந்திரா என்பவர் தனது குடும்பம் வறுமை நிலையில் உள்ளதாகவும், மகள் செல்வி சீ. சுவாதிக்கு தற்போது 18 வருடங்கள் பூர்த்தியாகி உள்ளதால், கருணை அடிப்படையில் வேலை வழங்குமாறு 06.06.2018 அன்று விண்ணப்பம் செய்துள்ளார் என்றும் தனியரின் பிறந்த தேதி 01.05.2000 என்றும் இளநிலை உதவியாளர் பணிக்கான அடிப்படை கல்வித்தகுதியான 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும் இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்றும் தெரிவித்து இறந்த அரசு ஊழியரின் மகள் செல்வி சீ.சுவாதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வழங்குமாறு கேட்டுக்கொண்டது தொடர்பாக தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டு, ஆய்வு செய்து, பணியிடை காலமான திரு.பெ. சீனிவாசன் என்பவரின் வாரிசுதாரரான செல்வி சீ.சுவாதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்க ஏதுவாக அரசாணை (நிலை) எண்.155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 10.12.2014–க்கு விலக்கு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016

Scanned by TapScanner

பிரிவு 20(6)(b)–க்குத் தளர்வும் அளித்து, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் செல்வி சீ.சுவாதி என்பவருக்கு 26.02.2020 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கப்பட்டு பணிபுரிந்து வருவதாகவும், தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்கு ஏதுவாக அசல் ஆவணங்களை அரசுக்கு அனுப்பி தனியரது கருணை அடிப்படையிலான பணி நியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரின் கருத்துருவை, அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி சீ.சுவாதி, இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 26.02.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை, முறையே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ2) துறை மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அலுவல் சார்பற்ற எண்.31768/ஜி2/2020-1, நாள் 04.03.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
செல்வி சீ. சுவாதி, இளநிலை உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், காஞ்சிபுரம்.
(வழி: இயக்குர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.)
இயக்குர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.

<u>நகல்</u>
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
அரசு இணைச் செயலாளரின் நேர்முக எழுத்தர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அநமு–2) துறை, சென்னை–600 009.
சுத்தநகல் / இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

9.3.2021
பிரிவு அலுவலர்
9-3-2021

Scanned by TapScanner